Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month










Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:7 இதழ்:11 நவம்பர் 2021 தனிபிரதி- ரு.20/- ஆண்டு சந்தா- ரு.200/-
VOL: 7 ISSUE NO : 11 November 2021 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-





# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பிரார்த்தனையினால் கர்த்தர் இயேசு செய்த மகத்துவமான அற்புதங்கள்

## கோமா நிலையிலிருந்த தம்பிக்கு சுகம் தந்த அதிசய தேவன்!



கடந்த வருடம் என் தம்பியின் சரீரத்தில் ஒரு வித பெலவீனம் ஏற்பட்டது. மிகவும் மெலிந்து விட்டான். தம்பியின் நிலையைக் கண்டு நாங்கள் அனைவரும் அதிக வேதனை அடைந்தோம். உடனே அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அவனை பரிசோதித்த மருத்துவர் தம்பிக்கு வந்துள்ள இந்த வியாதியை எங்களால் கண்டறிய இயலவில்லை. ஆகவே ஆசாரிபள்ளத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு செல்லும்படி கூறிவிட்டார்.

அதன்பின் அரசு மருத்துவமனையிலும் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்து தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்தனர். **ஆனால் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை. தம்பியின் நாடித் துடிப்பு குறைய ஆரம்பித்தது. கோமா நிலைக்கு செல்ல ஆரம்பித்தான். இந்த நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்திற்கு தொடர்புகொண்டு என் தம்பிக்காக ஜெபிக்கும்படி கூறினோம்.** அங்குள்ள ஜெப வீரர் உடனே பாரத்துடன் ஜெபித்தார். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் என் தம்பியின் நிலையை தெரிவித்து, தொடர்ந்து ஜெபிப்பதாக கூறி எங்களை ஆறுதல்படுத்தினார்.

**கர்த்தர் பெரிய அதிசயத்தை செய்தார். என் தம்பியின் நிலையில் முன்னேற்றம் வர ஆரம்பித்தது. தம்பி கோமா நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளிவர ஆரம்பித்தான். இப்பொழுது பூரண சுகம் அடைந்து, அவனுடைய வேலைகளை அவனே செய்யும் அளவுக்கு கர்த்தர் பெலன் கொடுத்துள்ளார்.** கர்த்தருடைய மாறாத அன்பிற்கு எங்களுடைய ஸ்தோத்திரங்களை செலுத்துகிறோம்.

**- Sis. எபிசா, மார்த்தாண்டம்**

## இரட்டிப்பான நன்மைகளை தந்த எங்கள் தேவன்!



நான் காவல் துறையில் சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி ஓய்வு பெற்றவன். என்னுடைய பல தேவைகளுக்காக சகோ. **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் தனி ஜெபத்தில் சொல்லி ஜெபிக்கும்படி கேட்டிருக்கிறேன். அத்துடன் அன்பரின் ஊழிய ஜெப மையத்திற்கும் தொலைபேசி வாயிலாக தெரிவித்து ஜெபிக்கும்படி கேட்டிருக்கிறேன். இதனால் என் வாழ்வில் ஏராளமான அற்புதங்களையும், அதிசயங்களையும் பெற்று தேவனை மகிமைப்படுத்தி வருகிறேன்.

குறிப்பாக என்னுடைய பேத்தி M.B.B.S மருத்துவபடிப்பை முடித்து, வேலையில்லாமல் இருந்தாள். அத்துடன் அவளுக்கு திருமணமும் நடைபெற வில்லை. அதனால் நாங்கள் மிகவும் மனம் சோர்ந்த நிலையில் இருந்தோம். நாகர்கோவிலில் நடைபெற்ற அன்பரின் ஊழிய குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் பங்கு பெற்று, ஜெப விண்ணப்பங்களை எழுதிக்கொடுத்து, ஐயாவை நேரில் சந்தித்து என் பேத்திக்காக ஜெபிக்கும்படி கேட்டிருந்தேன். கூட்டம் முடிந்த சில நாட்களில் ஐயாவிடமிருந்து கடிதம் வந்தது. அதில் **"பேத்திக்கு வேலையும், திருமண காரியமும் வாய்க்கும் என எழுதி அனுப்பியிருந்தார்கள். அப்படியே பேத்திக்கு மருத்துவர் பணி கிடைத்தது. தொடர்ந்து பேத்திக்கு நல்ல வரன் கிடைக்கவும் கர்த்தர் உதவி செய்தார்"** இந்த இரண்டு அற்புதங்களை செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

**- Bro. தேவராஜ், கலியக்காவிளை**

## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம் (Renovation) புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

## விடுதலையின் ஆசீர்வாத ஆராதனை

**ஞாயிறு தோறும்**

**காலை 9.30 மணி – 11.30 மணி**

- ✓ அபிஷேகம் நிறைந்த பாடல்கள்
- ✓ அனல்மூட்டும் தேவ செய்தி
- ✓ உற்சாகப்படுத்தும் ஜெப நேரம்



ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் குடும்பமாக இவ்வாராதனையில் பங்கு பெற அன்புடன் அழைக்கின்றோம்.

Live @ My Deliverance Church

டெலிவரன்ஸ் சர்ச், அன்பரின் ஊழிய ஜெப மையம்
10–வது குறுக்குத் தெரு, மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி–18.




# அன்பரின் ஊழியம்

மலர்:7 ◆ நவம்பர் 2021 ◆ இதழ் 11


## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கள் அனைவருக்கும்,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கின்றேன்!

**கர்த்தரில் அன்பு கூருகிறவர்களோ, வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போல இருக்கக்கடவர்கள் என்று பாடினார்கள். பின்பு தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது**

**- நியாயா. 5: 31**

கடந்த பத்து மாதங்களும் நம்மை தம்முடைய கண்ணின் மணியை போல பாதுகாத்த தேவாதி தேவனுக்கு நன்றிகளையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துவோமாக! நாம் நன்றாய் இருப்பதும், பிழைத்திருப்பதும் கர்த்தருடைய சுத்த கிருபையே! அவராலே அன்றி ஒரு அணுவும் அசையாது. உலகம் முழுவதிலும் பல்வேறு மாற்றங்களும், ஆபத்துக்களும், கொள்ளை நோய்களும், எதிர் பாராத சம்பவங்களும் நடந்தாலும், கொடுமையான வர்கள் மேலோங்கி நின்றாலும் நாம் கர்த்தருக்குள் களிகூருவோம். அவர் நம்முடைய கேடகம், அரண், கோட்டை. மேற்கூறிய வசனத்தில் எழுதி யிருக்கிறபடி சூரியனை போல் நாம் என்றும் அவருக்காய் பிரகாசிக்கிறவர்களாய் இருப்போம். மழை பெய்தாலும், காற்று வீசினாலும், கருமேகங்கள் சூழ்ந்தாலும் சூரியன் தன் வெளிச்சத்தை கொடுக்க தவறுவதில்லையே. இவைகள் ஒன்றும் சூரியனுடைய பாதையை தடுப்ப தில்லையே. அதே போலத்தான் கர்த்தரை நேசிக்கிற பிள்ளை களுடைய வாழ்க்கையை அவர் ஆசீர்வதிப்பார். ஒன்றுக்கும் கலங்காதீர்கள்!

தேவனுடைய அளவற்ற கிருபையால் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நாகர் கோவில், திருநெல்வேலி, சென்னை, ஐதராபாத், மதுரை மற்றும் திருச்சியில் அன்பு மக்களை சந்தித்து அவர்களுக்காக ஜெபிக்க கர்த்தர் உதவி செய்தார். தொடர்ந்து நமக்கு இருக்கின்ற திறந்த வாசல்கள் மூடப்படாதபடிக்கு கருத்தாய் ஜெபிப்போம். உங்கள் பகுதிகளிலும் நாங்கள் வந்து கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்றால் நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளலாம். ஆத்துமாக்களை திரளாய் ஆண்டவருக் கென்று அறுவடை செய்வோம். சுவிசேஷ விதைகளை விதைப்போம்.

S J Saves Trust ட்யூசன் மையங்கள் ஊரடங்கிற்கு பிறகு மறுபடியும் சிறிய அளவில் தொடங்கி உள்ளோம். இன்னும் விரிவுப்படுத்த


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

ஜெபியுங்கள். தொடர்ந்து நம்முடைய தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், Youtube சேனல்களில் வருகின்ற செய்திகள், பாடல்கள், ஆராதனைகள் மற்றும் வேதபாட வகுப்புகளை காணத் தவறாதீர்கள். அநேகருக்கும் அறிமுகப்படுத்துங்கள்! எங்கள் ஊழியத்தின் மூலமாக நீங்கள் பெற்ற எல்லா அற்புதங்களையும் தெரியப் படுத்துங்கள். இதற்காக நம்முடைய இணையதள வெப்சைட்டில் ஒரு பகுதி கொடுக்கப்பட்டுள்ளது, அதை பயன்படுத்திக் கொள்ளுங்கள். எங்களோடு இணைந்து தனி ஜெபம் மற்றும் ஆலோசனை ஊழியங்களை செய்ய விரும்புவோர் எங்களை தொடர்புகொண்டால் நாங்கள் அதற்குரிய பயிற்சியை கொடுத்து தேவை யான இடங்களில் ஊழியத்தில் பயன்படுத்துவோம்.

உங்களுக்காகவும், கல்லூரி மற்றும் பள்ளி களுக்கு செல்லுகின்ற பிள்ளைகளுக்காகவும் ஊக்கமாய், கருத்தாய் ஜெபிக்கிறோம். உன்னதமானவருடைய மறைவில் பிள்ளைகள் எப்பொழுதும் பாதுகாக்கப்பட்டு சுகத்தோடு இருப்பார்கள். நீங்களும் ஒவ்வொரு நாளும் ஜெப எண்ணெய் வைத்து பிள்ளைகளுடைய நெற்றியில் சிலுவை போட்டு ஜெபித்து, **சங்கீதம் 91ஐ** படித்து விட்டு போகச் சொல்லுங்கள். இயேசுவின் இரத்தமே நமக்கு மிகப் பெரிய பாதுகாப்பு. தொடர்ந்து எங்களுக்காகவும், ஊழியங்களுக் காகவும் ஜெபியுங்கள். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக!

**இம்மாத வாக்குத்தத்தம்**

ஏசாயா 43:1,2 & 54:13–17
நீதிமொழிகள் 19:17
2கொரிந்தியர் 9:8–15
பிலிப்பியர் 4:19

## இதயம் தொட்ட எண்ணம்

மனிதர்களுக்கு காத்திருக்குதல்
சோர்வை உண்டு பண்ணும்,
தேவனுடைய சமூகத்தில் காத்திருக்குதல்
அற்புதங்களை கொண்டு வரும்.

Waiting for people creates frustration,
Waiting in His presence brings
mighty miracles.

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 9500487061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 9500487061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

# பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி

## (Forgetting the past, seeking the future)



தேவ செய்தி : Rev.Dr.A. ஜாஷ்வா

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்களே!

தாயின் வயிற்றில் நாம் உருவாகுவதற்கு முன்னமே நம்மை அறிந்தவரும், நம்மை எப்போதும் பாதுகாப்பவருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஈடுஇணையில்லா நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

இந்த மாதத்தில் தேவ செய்தியை உங்களோடு பகிர்ந்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். சென்ற மாதங்கள் முழுவதும் நம்மோடுகூட இருந்து வழிநடத்தின தேவன் இப்புதிய மாதத்திலும் நம்மை ஆச்சரியமாகவும், அற்புதமாகவும் வழிநடத்துவார். இந்த மாதத்திலும் கர்த்தர் நமக்கு கொடுத்த தலைப்பு **"பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி"** இதற்கு ஆதாரமாக **பிலிப்பியர் 3:13-14** வசனங்களிலிருந்து ஒருசில காரியங்களை உங்களோடு பகிர்ந்துக் கொள்ள விரும்புகிறேன்.

**ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் - பிலிப்பியர் 3 : 13-14**

அப்போதஸ்லனாகிய பவுல் இந்த வார்த்தையை எப்படிப்பட்ட சூழ்நிலையில் கூறினார் என்பதை நாம் சற்று தெரிந்துக் கொண்டோம் என்றால் இதை நாம் மிக எளிதாக புரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். மேற்கூறிய வசனத்திற்கும் முன்பதாக உள்ள ஒரு வசனத்தை நாம் காண்போம், **"நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்"** **பிலிப்பியர் 3:12** இங்கே பவுல், இயேசு கிறிஸ்து தன்னை எதற்கு பிடித்தாரோ, அந்த நோக்கத்தை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடர்கின்றேன் என்று கூறுகிறார். இது பவுலின் தீராத ஆசை. (It is Paul's aspiration) இந்த ஆசையை நிறைவேற்ற, அவர் இரண்டு முயற்சிகளை எடுக்கிறார். முதலாவது தேவன் அவரை பிடித்த அந்த நோக்கம் எந்த விதத்திலும் சிதறிவிடுவதற்கு அவர் இடம் கொடுக்காமல் மிகக்கவனமாக இருக்கின்றார்.

இன்றைக்கு அநேக காரியங்களை குறித்து நாம் நினைக்கிறோம். அவற்றை செய்வதற்கு தீர்மானம் எடுக்கின்றோம். ஆனால் அதைச் செய்யும்பொழுது ஏராளமான தடைகள், பிரச்சனைகள் வரும்பொழுது அந்த காரியத்தை செய்ய முடியாமல் அப்படியே நாம் விட்டு விடுகின்றோம். ஆனால், பவுல் அப்படியல்ல. அவர் எடுத்த முயற்சியில் உறுதியாய் இருந்தார். இரண்டாவது தேவையில்லாத காரியங்களில் தன்னுடைய நேரத்தை வீணாக்க பவுல் விரும்பவில்லை. கர்த்தருடைய காரியங்கள்தான் தனக்கு முக்கியம் என்றும், தன் சக்தியையும், தன் நேரத்தையும், தன் காலத்தையும் உலகப் பிரகாரமான காரியங்களில் ஈடுபட்டு அதை வீணாக்க விரும்பவில்லை என்று ஆணித்தரமாக பவுல் கூறுகிறார். மனதில் தோன்றுகிற தேவையில்லாத எண்ணங்களை உலகக்காரியங்கள் என பவுல் சொல்கிறார். நமது மனம் சொல்லுகின்ற இடத்திற்கு எல்லாம் சென்று தேவையில்லாமல் நமது நேரத்தையும், காலத்தையும் வீணடிக்க கூடாது. ஒருமுறை இந்த பாவத்தை செய்வதால்

தவறில்லை என்று கூட சிலர் சொல்வார்கள். நம் மனதை கவர்ந்திழுக்கும் பொருட்கள், காரியங்கள் எல்லாம் நமக்கு இரண்டாம் பட்சமாக இருக்க வேண்டும். உங்கள் மாம்சப்பிரகாரமான எண்ணங்களும், உங்களை சூழ்ந்து இருக்கிற மக்கள் கூட்டமும் உங்களை கர்த்தரைவிட்டு விலகச்செய்யும். இப்படிப்பட்ட காரியங்களில் நமது நேரத்தையும், காலத்தையும் வீணாக்கக் கூடாது என பவுல் அதிகாரத்தோடு இந்த இரண்டு முயற்சிகளை எடுக்கிறார். அதை ஜெபத்தோடு வாசியுங்கள். நிச்சயமாக உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும்.

## 1. பின்னானவைகளை மறந்து (Forgetting the Past)

பிரியமானவர்களே, எப்படி பின்னானவைகளை மறப்பது என்பதைக் குறித்து சிந்திப்போம். திடீரென்று ஏற்பட்ட ஒரு பிரச்சனையின் நிமித்தம் சண்டை போட்டு, நெடுநாட்களாக பிரிந்திருக்கும் இரண்டு நண்பர்களோ, அல்லது உறவினர்களோ நேரில் சந்தித்து, பேசிக்கொள்ளும் பொழுது அவர்கள் முதலாவது சொல்வது, பழையவைகளை மறந்துவிடுவோம், இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வோம் என்று தான் சொல்வார்கள். இது மக்கள் மத்தியில் நடக்கின்ற வழக்கமான ஒரு காரியம். இயேசு கிறிஸ்துவும் **லூக்கா 9:62ல்** **"கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல"** என்று கூறுகிறார். கர்த்தருக்கென்று, அவருடைய பணிக்காக வந்துவிட்ட பிறகு நாம் பின்னிட்டு ஒருபோதும் பார்க்கவே கூடாது. தேவனுக்காக நாம் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். **சோதோம், கொமோரா பட்டணம் அழியப் போகிறது என்பதற்காக தூதன் அவர்கள் கையை பிடித்து, பட்டணத்திற்கு வெளியே கொண்டு போய் விடுகிறான். ஓடு பின்னால் பார்க்காதே என்று கூறியும் லோத்தின் மனைவி பின்னால் பார்த்தாள், அப்படியே உப்புத்தூணாகி விட்டாள்** என்று **ஆதியாகமம் 19:16-26** வசனங்களிலே நாம் வாசிக்கிறோம். பின்னிட்டு பார்ப்பது அவ்வளவு ஆபத்து. எனவே தான் வேதம் பின்னானவைகளை மறந்துவிடு என்று கூறுகிறது. பவுல் பின்னால் பார்க்கவில்லை, அப்படி அவர் பின்னிட்டு பார்த்திருந்தால் நிறைய பிரச்சனைகள் வந்திருக்கும். **ஆகிலும், எனக்கு லாபமாயிருந்த வைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன் - பிலிப்பியர் 3:7,11** இங்கு பவுல் தனக்கு லாபமாயிருக்கிறவைகள் எவைகளோ அவைகளை நஷ்டமும், குப்பையுமாக எண்ணுகிறேன் என தைரியமாக கூறுகிறார். பவுலுக்கு லாபமானவைகள் என்ன? **பிலி.3:5,6** வசனங்களின்படி அவன் **"எட்டாம் நாளில் விருத்தசேதனம் அடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப் பிரமாணத்தின்படி பரிசேயன், பக்தி வைராக்கியத்தின்படி சபையை துன்பப் படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்"** இவைகளையே தனக்கு லாபமாயிருந்தவைகளாக எழுதுகின்றார். தனக்கு லாபமாயிருந்தவைகளை பவுல் நஷ்டமும், குப்பையுமாக எண்ணினார். பவுலுக்கு தன்னுடைய பின்னான பாவத்தை, தவறுகளை பார்ப்பதற்கு விருப்பமில்லை. அவர் அப்படி என்ன செய்தார்? **"கர்த்தருடைய சீஷர்களை பயமுறுத்தி கொலை செய்ய துணிந்தவன்"** என்று **அப். 9:1ல்** வாசிக்கின்றோம். இன்றும் கூட சிலர் பழையவைகளை எல்லாம் நினைத்துக் கொண்டே இருப்பார்கள். என்றைக்கும் கடந்த காலத்தில் நடந்ததை குறித்து சொல்லிக் கொண்டே இருக்கக் கூடாது.

**ஒருமுறை மார்ட்டின் லூத்தர் என்னும் தேவமனிதன் தனது வீட்டில் மிகவும் கவலையாக இருந்தார். அவருடைய மனைவி வந்து ஏன் இப்படி கவலையுடன் இருக்கிறீர்கள் ஏதாவது பிரச்சனையா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், எனக்கு முன் பிசாசு வந்து நின்று நீ இவ்வளவு பாவம் செய்தவன் தானே என்று பெரிய லிஸ்ட்டை காட்டியது, அவற்றை படித்த வுடன் என்னுடைய பழைய பாவங்கள் எல்லாம்**

**ஞாபகத்திற்கு வந்து விட்டது. ஆகவே "அதில் எழுதப்பட்டிருந்த பாவத்தை எல்லாம் சிவப்பு மையினால் ஒவ்வொன்றாக அழித்து, இயேசுவின் இரத்தம் இந்த பாவங்களை எல்லாம் கழுவி விட்டது என எழுதி விட்டேன்" என்று தன் மனைவியிடம் கூறினாராம். இவ்விதமாக பிசாசு பழைய பாவங்களை ஞாபகப்படுத்துவதில் வல்லவன் நாம் கவனமாயிருக்க வேண்டும்.**

ஆம்! அன்பு வாசகர்களே! பவுல் இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டவன். இனி பின்னானவைகளை பார்த்து பிரயோஜனமே இல்லை. ஏனென்றால் பவுல் கர்த்தருக்காக வைராக்கியமாக ஓடுகின்ற பரிசுத்தவானாக இருந்தான். பந்தயத்தில் ஓடுகிறவன் தன் வெற்றியின் இலக்கை மட்டுமே மனதில் நிறுத்தி, முன்னால் மட்டும் பார்க்க வேண்டும். பின்னால் பார்த்தால் அவ்வளவு தான் மனதில் தளர்வு வந்துவிடும். கடந்த காலம் அது இறந்த காலம் என்று சொல்வார்கள். அது திரும்ப வராத ஒரு காலம், அதை ஏன் நாம் நினைத்து கவலைப்பட வேண்டும். இதை வாசிக்கின்ற அன்பானவர்களே! ஒருவேளை கடந்த காலத்தை குறித்து நீங்கள் நினைத்து கலங்கிக் கொண்டிருக்கலாம். எதிர் பாராமல் வந்த நோய்கள், இழப்புகள், தேவையற்ற அலைச்சல்கள் உங்கள் மனதை அதிகமாக பாதித்தும் இருக்கலாம். கலங்காதீர்கள்! பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி ஓடுங்கள். கர்த்தர் உங்களுக்கு துணையிருப்பார். அவருடைய ஆலோசனை, பாதுகாப்பு உங்களுக்கு எப்பொழுதும் உண்டு.

## 2. முன்னானவைகளை நாடி (Seeking the Future)

எதிர்காலத்தைக் குறித்து சிலர் சொல்லும் பொழுது, அது உங்களுக்கு ரொம்ப நல்ல காலம், அது ஒரு பொற்காலம் என்பார்கள். சிலர் கர்த்தருடைய கிருபை என்னை அப்படியே நடத்தி சென்று, கடைசியில் பரலோகத்திற்கு கொண்டு சேர்த்துவிடும் என்றும் சொல்வார்கள். அவர்கள் எந்த முயற்சியுமே எடுக்காமல் இருப்பார்கள். தேவ கிருபை இருக்கிறது என்பதற்காக வெறுமனே இருந்துவிடக் கூடாது. தொடர்ந்து ஏதாவது முயற்சி எடுக்க வேண்டும். பவுலுக்கு கிருபை இருந்தது, அதற்காக அவர் உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை. **கர்த்தர் என்றைக்கு அவரை தொட்டாரோ அப்பொழுதே, தாமதமின்றி கிறிஸ்து இயேசுவே இரட்சகர் என்று சொல்லி அவருக்காக பல பாடுகளை பட்டார், கர்த்தருக்காக கஷ்டங்களை அனுபவித்தார். கடைசி வரை சாட்சியாக வாழ்ந்தார்.** கிருபை ஒரு பக்கம் இருந்தாலும், முயற்சியும் இருக்க வேண்டும். திடீரென்று ஓட்டப் பந்தயத்தில் ஒருவர் ஓட முடியாது, அதற்காக அவர் வருடக்கணக்கில் பயிற்சி எடுத்திருக்க வேண்டும். அதுபோலத் தான் **ஆவிக்குரிய ஓட்டத்தில் முன்னோக்கி ஓடுவதற்கு மூன்று காரியங்களை செய்ய வேண்டும்.**

### a) தேவனுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படிய வேண்டும்.

*(Submit to God and obey Him)*

கர்த்தர் பவுலை தொட்டவுடன் **"ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்"** என்று கேட்கிறார். அதுதான் முழுமையான ஒப்புக் கொடுத்தல். சாமுவேலைப் போல **"சொல்லும் அடியேன் கேட்கிறேன்"** என்று சொல்வதுதான் கீழ்ப்படிதல். முன்னானவைகளை நாடி செல்வதற்கு ஒப்புக்கொடுத்தல், கீழ்ப்படிதல் ஆகிய இரண்டும் மிக மிக அவசியம்.

### b) தடையாயிருப்பவைகளை தூக்கி வீச வேண்டும்.

*(Throw off everything that hinders)*

முன்னால் ஓடுவதற்கு உங்களுக்குள் தடை செய்கின்ற எல்லா தடைகளையும் வெளியே தூக்கி யெறியுங்கள். அது உங்களுக்குள் இருக்கிற பெருமையாக, அதிகாரமாக, தகுதியாக, புகழ், அந்தஸ்து, மற்றும் செல்வாக்காக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் நீங்கள் முன்னோக்கி போவதற்கு தடையாக இருந்தால் அதை உடனடியாக தூக்கி வீச வேண்டும்.

**ஒரு வாலிபன் இயேசுவினிடத்தில் வந்து "ஆண்டவரே நான் பரலோகத்திற்கு வருவதற்கு என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான். அப்பொழுது இயேசு "உன்னிடத்தில் இருக்கின்ற சொத்துகளை விற்று ஏழைகளுக்கு கொடுத்து விட்டு என்னோடு பரலோகத்திற்கு வா" என்றார். அந்த வாலிபனுக்கு, பரலோகத்தின் மகிமையான வாழ்வைக்குறித்த ஒரு எண்ணம் சிறிதேனும் இல்லை. அந்த எண்ணம் அவனுக்கு இருந்திருந் தால் இந்த உலகத்தில் இருக்கிற எதுவும் அதற்கு நிகரல்ல என்று நினைத்திருப்பான். அவனுக்கு அப்பொழுது சொத்து மேன்மையானதாக தெரிந்தது, பரலோகத்தை இழந்தான். அவனைப் போல பரிதாபத்திற்குரியவன் யாருமில்லை. இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து துக்கத் தோடு, கஷ்டத்தோடு திரும்பிச் சென்றவன் இவன் ஒருவன் மாத்திரமே.**

அருமையானவர்களே! நமக்கு தடையாக இருக்கிற காரியங்கள் எதுவாக இருந்தாலும் அதை நாம் முதலாவது தூக்கியெறிய வேண்டும். ஓட்டப் பந்தயத்தில் ஓடுகிறவன் முதுகில் ஏதாவது சுமையை வைத்துக் கொண்டு ஓட மாட்டான். ஓட்டப் பந்தயத்திற்குரிய உடையை அணிந்து கொண்டு தான் ஓடுவான். அதேபோலத்தான் இயேசுவை நோக்கி, முன்னால் ஓட வேண்டும் என்றால் உங்களுக்குள் இருக்கிற உலகத்தின் அழுத்தங்களை பின்னால் எறிந்து விட வேண்டும்.

### c) விடா முயற்சியோடு ஓடவேண்டும்

### *(Run with perseverance)*

ஒரு முறை முயற்சி செய்து முடியவில்லை என்றால், அடுத்தடுத்து முயற்சி எடுக்க வேண்டும். **"ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத் தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமா யிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" எபிரெயர் 12 : 1**

ஜனங்களில் நிறைய பேர் தன் காரியங்களை பார்ப்பதில்லை. அடுத்தவர்களின் காரியத்தையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். அப்படிப் பட்டவர்கள் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. இயேசுவே இதைக் குறித்து **"உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை பார்க்காமல், அடுத்தவர்கள் கண்ணில் இருக்கிற துரும்பை பார்க்கிறதென்ன"** என்கின்றார். உங்களுக்கு நியமித்திருக்கிற வரிசையில் நீ ஓடு, அதைவிட்டு விட்டு பக்கத்தில் இருக்கிறவன் எப்படி ஓடுகிறான் என்று பார்க்கக்கூடாது. அப்படி பார்த்தால் உங்கள் தகுதியை இழந்துவிடுவீர்கள். அப்படி தகுதி இழந்து விட்டீர்கள் என்றால் நரகத்திற்கு தான் போக வேண்டும் என்பதை மறந்து விடக் கூடாது. விடா முயற்சியோடு, பொறுமையோடு நம்முடைய வரிசையில் நாம் ஓட வேண்டும். அப்பொழுது நிச்சயம் தேவ சித்தத்தை நம் வாழ்க்கையில் நிறைவேற்றுவோம். ஆண்டவரும் நமக்கு அதற்கான வழியை திறந்துக்கொடுத்து நம்மை நடத்துவார்.

## 3. பரம அழைப்பு
## (Heavenly call or High calling)

**நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண் டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலான வைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளை யல்ல, மேலானவை களையே நாடுங்கள்**

**- கொலோ. 3: 1, 2**

இது ஒரு மேல் நோக்கிய அழைப்பு (Upward call) தேவன் உங்களை அழைத்த அழைப்பு ஒரு சாதாரண அழைப்பு அல்ல, ஓர் உயர்ந்த அழைப்பு, கனமான அழைப்பு, பரிசுத்த அழைப்பு. இந்த அழைப்பிற்கு அழைக்கப் பட்டவர்கள் பின்னிட்டு திரும்பினால் அது பிரயோஜனமற்றது. முன்னால் பார்த்து அழைப்பிற்கு கீழ்ப்படிந்து ஓட வேண்டும். அப்பொழுது பரம அழைப்பிற்கு பங்குள்ளவர் களாகுவோம்.

**"இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே" எபிரெயர் 3:1a**

## 4. இலக்கை நோக்கி ஓட வேண்டும்
## (Run towards the Goal)

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு செயல் படுகின்ற கிறிஸ்தவன். செயல்படாத கிறிஸ்தவன் என்றால் என்ன தெரியுமா? சில பேர் சபைக்கு வருவார்கள். ஒரு ஆர்வம் என்பதே இருக்காது, அப்படியே வருவார்கள், அப்படியே சென்று விடுவார்கள். ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறவன் நடந்தாலே ஒரு கம்பீரமாக இருப்பான். சோம்பேறியாக இருக்கிறவன் ஓட்டப்பந்தயத்திற்கு தகுதியற்றவன். பவுல் கிறிஸ்துவை போல மாற வேண்டும் என்பதற்காக அவருக்காக ஓடினார், சுறுசுறுப்பாக செயல்பட்டார் என்பதை மறந்து விடக் கூடாது.

**தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார் - ரோமர் 8:29** தேவன் அவரை முன் குறித்திருந்த படியால் பவுல் தனக்கு நியமிக்கப்பட்ட இலக்கை நோக்கியே ஓடுகின்றார்.

## 5. பந்தயப் பொருள்
## (Prize)

கடைசியாக பவுல் ஏன், எதற்காக இப்படி ஓடுகின்றார் என்றால் அவர் பந்தயப் பொருளை பெறுவதற்காக ஓடிக் கொண்டிருக்கிறார். பந்தயப் பொருள் என்றால் என்ன? அது தான் பரிசு. இந்த பரிசு சாதாரண ஒரு பரிசல்ல. இது Supreme, Heavenly Prize, ஒரு மேன்மையான, பரலோக பரிசாக இருக்கிறது. ஓட்டத்தை ஓடி இலக்கை அடைந்தவர்களுக்கு கர்த்தர் இந்த பரிசை தருகின்றார். இரண்டு விதமான பரிசுகள்,

**I. தேவனோடு முழுமையான ஐக்கியத்திற்குள் இருக்கும் பாக்கியம் அதுதான் பரலோக வாழ்வு.**
*(Full fellowship with Christ)*

**2. தேவனுடைய சுதந்தரர், கிறிஸ்துவுடனே உடன் சுதந்தரர்.**
*(Heirs of God & co-heir with Christ)*

**நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடு பட்டால் அப்படியாகும் - ரோமர் 8 : 17**
அவருடனே கூட நாம் பாடுபட்டால் அவரோடு கூட மகிமையான அனுபவத்திற்குள் செல்லலாம்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது ஒரு ஓட்டம், எல்லோரும் ஓடித் தான் ஆக வேண்டும். நான் உட்கார்ந்து இருக்கிறேன் என்றால் உட்கார்ந்து கொண்டே இருக்க வேண்டியது தான். சிலர் ஓடாமல் ஒரு பிரயோஜனமும் இல்லாமல் இருப்பார்கள். பள்ளிகளில், கல்லூரிகளில் சில மாணவர்கள் ஒரு நாளும் மைதானத்திற்குள் செல்ல மாட்டார்கள். அவர்கள் வெளியே உட்கார்ந்து பந்துகளை எடுத்து தருவது, கதை பேசுவது தான் இவர்களது வேலை. **"வெளியே உட்கார்ந்திருக்கிற யாரும் பரிசை பெற முடியாது"** என்று கர்த்தர் சொல்கின்றார். அப்படி என்றால் எப்படி செயல்பட வேண்டும்? பெற்றுக்கொள்ளத் தக்கதாக ஓட வேண்டும்.

**பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்.**

**பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்** என்று **1கொரி. 9:24, 25ல்** நாம் வாசிக்கின்றோம்.

அன்பானவர்களே! கிறிஸ்துவிற்காக ஓடுகின்ற எல்லோருக்கும் பரிசு கிடைக்கும். உலகப்பிரகாரமாக ஓடினால் வெற்றி பெற்றவர்களுக்கு மாத்திரமே பரிசு கிடைக்கும், அதுவும் அழிவுள்ள கிரீடம் தான் கிடைக்கும். ஆனால் நாமோ அழிவில்லாத கிரீடத்தை பெறுவதற்காக ஓடுகின்றோம். ஆகவே தான் பவுல் பெற்றுக் கொள்ளத் தக்கதாக ஓடுங்கள் என்று கூறுகின்றார்.

**சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் - யாக்கோபு 1 : 12**ல் யாக்கோபு என்னும் பக்தன் அருமையாக எழுதுகின்றார்.

**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.**

**இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதி யாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் - 2 தீமோத்தேயு 4:7,8**

மேற்கூறிய வசனங்கள் தான் பவுலின் கடைசி வார்த்தை. பிரியமான தேவ ஜனமே! அப்போஸ்தலனாகிய பவுல் முன்னோக்கி ஓடி ஓட்டத்தை வெற்றியோடு முடித்தவர்களில் நமக்கு நல்ல மாதிரியாக இருக்கிறார். அவர் மூலமாய் கற்றுக்கொண்ட ஐந்து காரியங்களை நீங்களும் உங்கள் வாழ்வில் கடைபிடிக்க இன்றே முயற்சி செய்யுங்கள். **பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, பரம அழைப்பிற்கு கீழ்ப்படிந்து, இலக்கை நோக்கி ஓடி முடித்து அழியாத பரிசை பெற்றுக்கொள்ள இன்றே உங்களை அர்ப்பணியுங்கள்.** நாம் இந்த உலகத்தில் எவ்வளவு காலம் இருப்போம் என்று தெரியாது. ஒரு நாள் உலகத்தை விட்டு எல்லோரும் கடந்து போக வேண்டியிருக்கும். அதற்கு முன்பு இப்படிப்பட்ட ஒரு விசுவாச அறிக்கையை தைரிய மாக சொல்லக்கூடிய அளவிற்கு உங்களுடைய வாழ்க்கை இருக்கிறதா? என்று உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். **நல்ல போராட்டதை போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் என்று பவுலை போல ஆணித்தரமாக உங்களால் சொல்ல முடியுமா?** எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே! **இன்றே உங்களை கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள்.** உதவி செய்யும் ஆண்டவரே என்று கெஞ்சுங்கள்! அப்பொழுது நிச்சயம் சர்வ வல்ல தேவன் இவ்வுலக ஓட்டத்தை நீங்கள் வெற்றியோடு முடித்து அழியாத கிரீடத்தை பெறுவதற்கு வேண்டிய பெலனையும், சத்துவத்தையும் தருவார். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!


## Employment Opportunity

## வேலை வாய்ப்புகள்

1) ***Accountant***
   ***B.Com., / M.Com., Graduates***
   *Skills Required : Tally ERP 9* பயன்படுத்த தெரிந்தவர்கள்
2) ***Prayer warriors :*** *Qualification +2/Any degree Born again Christian only*
3) ***Camera men with adequate experience***
   முன் அனுபவமுள்ள கேமராமேன்கள்
4) ***Video Editors***
5) ***Drivers***
6) ***Cooks***
7) ***House keepers***

தகுந்த ஊதியம் கொடுக்கப்படும்
*Apply to : info@mojindia.org*
கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்

# Praise Report - துதி அறிக்கை

## தீர்க்கதரிசனத்தன்படியே ஆசீர்வதித்த தேவன்!



என் மனைவியின் பெயர் சிந்து. நாங்கள் நாகர் கோவில் தோவாளை என்ற இடத்திலிருந்து வருகிறோம். எங்களுக்கு திருமணமாகி நான்கு வருடங்களாக குழந்தையில்லாமல் அதிக கஷ்டப்பட்டோம். உறவினர்களின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் பட்டய குத்துக்கள் போல எங்கள் உள்ளத்தை ஊடுருவி, எங்களை அதிக வேதனைக்கு உள்ளாக்கியது. அநேக மருத்துவ பரிசோதனைகள் செய்தும் எந்த பலனும் இல்லை.

நாகர்கோவிலில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தைக் குறித்து அறிந்து நாங்கள் முதன்முறையாக கூட்டத்திற்கு வந்தோம். ஜெப வேளையில் கர்த்தர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் மூலமாக எங்களைக் குறித்து தீர்க்கதரிசனமாக **"கர்த்தர் உங்கள் கண்ணீரையும், நிந்தையையும் அறிந்திருக்கிறார். உங்கள் வெட்கத்திற்குப் பதிலாக இரண்டத்தனையான பலன் வரும். கர்த்தர் உங்களுக்கு மூன்று குழந்தைகளை கட்டளையிடுவார். உங்கள் வாழ்வில் தேவன் மகிழ்ச்சியை கட்டளையிடுவார்"** என்று கூறினார்கள்.

அதன்பின் தனி ஜெபத்திலும் அவர்கள் ஒரு உடன்பிறந்த சகோதரனைப் போல எங்கள் காரியங்களை விசாரித்து, எங்களுக்காக பாரத்துடன் ஜெபித்து அனுப்பினார்கள். சர்வ வல்லதேவன் தாமே சகோதரன் மூலம் கூறின தீர்க்கதரிசனத்தின்படியே எங்களுக்கு இரங்கி இரண்டு ஆண் பிள்ளைகளை கொடுத்தார். இப்பொழுது என் மனைவி 3-வது முறையாக கர்ப்பம் தரித்திருக்கிறாள். கர்த்தருடைய நாமம் மகிமைப் படுவதாக!.

**- திரு. சுஜை - சிந்து, நாகர்கோவில்**

## தீர்க்கதரிசனத்தின்படி குழந்தை பாக்கியம் அருளின அற்புதர்!

எங்களுக்கு 2014ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. சுமார் மூன்று ஆண்டுகளாக குழந்தை பாக்கியமில்லை. தொடர்ந்து பல்வேறு மருத்துவ சிகிச்சைகளை மேற்கொண்டோம். மருத்துவர்கள் செயற்கை கருத்தரித்தல் மூலம் குழந்தை பிறக்க முயற்சி செய்யலாம், மற்றபடி குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லை என்று கூறியதால் செயற்கை முறையில் கருவுற்றேன். அந்த கருவும் ஒருசில மாதங்களில் கலைந்துவிட்டது. இதனால் மிகவும் துக்கமடைந்தோம். இந்நிலையில் சென்னையில் நடைபெற்ற பங்காளர்களுக்கான தனிஜெபத்தில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டோம். சகோதரர் எங்களுக்காக ஜெபித்து **"கர்த்தர் உங்களுக்கு குழந்தை பாக்கியத்தை தருவார்"** என்று கூறினார்கள். **சகோதரர் கூறின தீர்க்கதரிசனத்தின்படி ஒருசில மாதங்களில் இயற்கையாகவே கருவுரும்படி கர்த்தர் அற்புதம் செய்தார்.** இது உண்மையாகவே மிகுந்த ஆச்சரியமான ஒன்றாக இருந்தது. **2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் தேதி கர்த்தர் எங்களுக்கு அழகிய பெண் குழந்தையை கொடுத்து ஆசீர்வதித்தார்.** கர்த்தர் செய்த இந்த மாபெரும் அற்புதத்திற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

**- திருமதி. லின்டா மார்ஷல்**

## கால் வேதனை, கண் பிரச்சனை நீங்கியது

எனது மகளுடைய காலில் ஒரு புண் இருந்தது. அந்த புண் வெகு நாட்கள் ஆகியும் குணமடையாமல் அப்படியே இருந்தது. மகளுடைய கண்களிலும் பிரச்சனை ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டு வந்தாள். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறியதால் நாங்கள் மிகவும் பயந்தோம்.

மகளுடைய சுகத்திற்காக ஜெபிக்கும்படி அன்பரின் **ஊழியத்திற்கு கடிதம் எழுதினோம். அவர்கள் ஜெபித்து பதில் கடிதம் அனுப்பினார்கள். அந்த கடிதத்தில் எழுதியிருந்தது போலவே காலில் இருந்த புண் ஆறி விட்டது. கண்களில் இருந்த பிரச்சனையும் நீங்கி இப்பொழுது நலமுடன் இருக்கிறாள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!** சகோதரர் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் என் மருமகனுக்காக ஜெபித்து, அவர் வெளிநாடு செல்வார் என்று தீர்க்க தரிசனமாக சொன்னார்கள். அதன்படி என் மருமகன் வெளிநாடு சென்று அங்கு ஐந்து ஆண்டுகள் பணியாற்றி மீண்டும் இந்தியா திரும்பி வர கர்த்தர் உதவி செய்தார். அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**- Mrs. புஷ்பராணி, பாளையங்கோட்டை**

## குழந்தையே பிறக்காது என்ற மருத்துவர் கூற்றை மாற்றி குழந்தை பாக்கியத்தைத் தந்த அருள்நாதர்!

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலியில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். எனக்கு குழந்தை பிறக்காது என்று மருத்துவர்கள் கூறியிருந்ததினால் அதிக மனவேதனையுடன்தான் அந்த கூட்டத்தில் அமர்ந்திருந்தேன். ஜெப வேளையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் **"என்னுடைய பெயரைச் சொல்லி அழைத்து, கர்த்தர் உங்களுக்கு குழந்தை பாக்கியத்தை தருகிறார்"** என்று கூறினார்கள். இதைக் கேட்டு நான் அதிக மகிழ்ச்சி யடைந்தேன். கர்த்தர் சொன்ன வார்த்தையின்படி எனக்கு அடுத்த ஆண்டில் ஆண் குழந்தை பிறந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! மேலும் எனக்கு அடிக்கடி வரும் அடிவயிற்று வலியிலிருந்தும் அற்புத சுகம் பெறும்படி கர்த்தர் கிருபை செய்தார்.

**- Mrs. கவிதா, சங்கரன்கோவில்**

## விரும்பிய மேற்படிப்பிற்கு கல்லூரியில் இடம் கிடைத்தது!

என் பெயர் விமலா. என் மகள் 12-ம் வகுப்பு படித்துக்கொண்டு இருந்தாள். அப்பொழுது எனது தாயார் எனது மகளுக்காக ஜெபிக்கும்படி அன்பரின் ஊழியத்திற்கு கடந்த வருடம் ஒரு கடிதம் எழுதினார்கள். அவள் பன்னிரெண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுக்கவும், அரசு கல்லூரியில் இடம் கிடைக்கவும் ஜெபிக்கும்படி அந்த கடிதத்தில் எழுதியிருந்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு எனது மகள் நல்ல மதிப்பெண்கள் எடுக்கவும், அரசு மருத்துவகல்லூரியில் B.Sc., Nursing படிக்கவும் கிருபை செய்தார். கர்த்தர் செய்த அற்புதத்திற்காக அவரை துதிக்கின்றேன்.

**- திருமதி. விமலா குளோரி, திருநெல்வேலி**

## முதுகு வலியிலிருந்து அற்புத சுகம்

கடந்த ஒரு வருடத்திற்கு மேல் எனக்கு முதுகுவலி அதிகமாக இருந்தது. உட்கார்ந்துவிட்டு எழுந்தால் முதுகு வலிக்கும். தொடர்ந்து அந்த வலியினால் கஷ்டப்பட்டுக்கொண்டே இருந்தேன். சென்ற முறை **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் திருநெல்வேலி வந்தப்பொழுது, அவர்களிடம் எனது முதுகுவலி நீங்க ஜெபிக்கும்படி சொன்னேன். அவர் என் மேல் கையை வைத்து ஜெபித்து அனுப்பினார். அந்த பாரமான ஜெபத்திற்கு பிறகு எனக்கு முதுகு வலியே இல்லை. சுகம் தந்த தேவனுக்கு கோடாகோடி ஸ்தோத்திரம்!

**- Sis. லில்லி புஷ்பம், திருநெல்வேலி**

## ஜெபத்திற்கு பதில் தந்த இராஜாதி இராஜா இயேசு

எனது மகனுக்கு ஆறு வயது நடக்கும்பொழுது ஒரு நாள் வலிப்பு நோய் வந்தது. அதற்காக நான் திருவெல்வேலியில் நடைபெறுகிற கூட்டத்திற்கு வந்து **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்தித்து என் மகனுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். இப்பொழுது மகனுக்கு 18 வயது முடிந்துவிட்டது. இதுவரை அந்த வலிப்பு நோய் வரவில்லை. எனது உடன்பிறந்த தம்பிக்கு எட்டு வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லை. அதற்காகவும் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஜெபித்தார்கள். கர்த்தர் கிருபையாய் இரங்கி,இரண்டு ஆண் குழந்தைகளை கொடுத்தார். மேலும் எனது கணவருக்கு பாளையங்கோட்டைக்கு

பணியிட மாறுதல் கிடைக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தர் செய்த இந்த மூன்று அற்புதத்திற்காகவும் கர்த்தரை மனதார துதிக்கின்றேன். எங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்கிற சகோதரர் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறேன்.

**- திருமதி. ரெஜினா, திருநெல்வேலி**

## திருமண காரியத்தின் தடையை நீக்கிய வல்லமையான தேவன்

எனக்கு 33 வயதாகியும் திருமணம் நடைபெறவில்லை. இதனால் மிகவும் மனம் சோர்ந்து நாட்களை கடத்தி வந்தேன். இந்நிலையில் ஜுன் மாதம் 26ஆம் தேதி **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்களது **Zoom Meeting**-ல் பங்கு பெற்றேன். அப்பொழுது சகோதரர் அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் எனக்கு தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அவர்கள் **"அடுத்து வரும் திருமண வரன் உனக்கு சரியானதாக இருக்கும்"** என்று கூறினார். அவர்கள் கூறியது போலவே என்னை பெண் பார்ப்பதற்கு ஒரு குடும்பம் வந்தது. தீர்க்கதரிசனத்தின்படியே அந்த வரன் அற்புதமாக முடிந்து, செப்டம்பர் 3ஆம் தேதி திருமணம் தேவ ஆசீர்வாதத்துடன் நடந்தது. எல்லாவற்றையும் அற்புதமாக நடப்பித்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கின்றேன்.

**- Mrs. வரலட்சுமி**






## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**HARVEST TV**
சனி இரவு 07.30 – 08.00

# அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் ஜெபித்து சென்றதின் மூலம் இயேசு செய்த மாபெரும் அற்புதம்!

**இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு, என் கண்கள் திறந்தவைகளும், என் செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும் – (2 நாளா. 7:15)**



## கோமா நிலையில், மரணத் தருவாயில் இருந்த எனது அண்ணனின் ஜீவனை மீட்டெடுத்த சர்வவல்ல தேவன்!

என் பெயர் ஜான்சி எனது அண்ணனுக்கு திடீரென்று பேச்சு வராமல் போய், மயங்கி விழுந்து விட்டார்கள். அதன்பிறகு அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை, படுத்த படுக்கையாகி விட்டார். இதனால் மிகவும் பயந்துபோய் கண்ணீர் வடித்தோம். உடனடியாக எங்கள் ஊரில் உள்ள சிறப்பு மருத்துவமனைக்கு தூக்கி சென்றோம். அவர்கள் பரிசோதித்து பார்த்துவிட்டு இங்கு இவருக்கு சிகிச்சை அளிக்கும் அளவிற்கு மருத்துவ வசதி யில்லை. எனவே திருச்சிக்கு அழைத்து சென்றுவிடுங்கள் என்று கூறிவிட்டார்கள். எங்களுக்கு மேலும் பயம் அதிகரித்தது, எனது அண்ணன் மயக்க நிலையிலேயே இருந்தார். அங்கிருந்து ஆம்புலன்சில் திருச்சி, தில்லைநகர் 10வது கிராஸில் உள்ள ஒரு சிறப்பு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். அங்கு உடனடியாக அட்மிட் செய்தார்கள். தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்த பின், எங்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள். நான் மிகவும் கலங்கிய நிலையில் மருத்துவமனையின் பின்புறம் அமர்ந்திருந்தேன். அப்பொழுது அங்கிருந்த **அன்பரின் ஊழிய ஜெப ஸ்தல கட்டிடம் தெரிந்தது.** ஏற்கனவே அன்பரின் ஊழியப் பத்திரிக்கை நான் வாசித்திருந்த படியால் நம்பிக்கையோடு ஜெப ஸ்தலத்திற்கு வந்தேன். அங்கு இருந்த ஜெப வீரர்களை



சந்தித்து எனது அண்ணனின் நிலையை கூறினேன். அவர்கள் **எனது அண்ணனுக்காக கண்ணீரோடு ஜெபித்து ஜெப எண்ணெயை வழங்கினார்கள். அந்த ஜெபத்திற்கு பிறகு எனக்கு நம்பிக்கை பிறந்தது. மீண்டும் மருத்துவமனைக்கு சென்று, ஜெப எண்ணெயை எனது அண்ணனின் தலையிலும் சரீரத்திலும் ஜெபத்தோடு பூசினேன். கர்த்தர் அற்புதம் செய்தார். மறுநாள் காலை எனது அண்ணன் படுக்கையிலிருந்து எழும்பி உட்கார்ந்தார், எங்களோடு பேச ஆரம்பித்தார், உணவும் உட்கொண்டார். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. மருத்துவர்களே மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். மருத்துவர்கள் எனது அண்ணனை பரிசோதித்துவிட்டு நன்றாக இருக்கிறார். அவரை வீட்டிற்கு அழைத்து செல்லலாம்** என்று கூறினார்கள். பயந்துபோன நிலையில், அண்ணன் பிழைப்பாரா, மாட்டாரா என்று கண்ணீரோடு ஜெப ஸ்தலத்திற்கு வந்தேன். அங்கு ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தை ஜீவனுள்ள தேவன் கேட்டு, அற்புதம் செய்கிறார் என்பதை என் வாழ்க்கையில் அறிந்துக்கொண்டேன். தேவன் செய்த அற்புதத்திற்காக ஸ்தோத்திரம் செலுத்துகின்றேன். **கர்த்தர் செய்த அற்புதத்தை சில மாதங்கள் கழித்து எனது அண்ணனை ஜெப ஸ்தலத்திற்கு அழைத்து வந்து இந்த சாட்சியை கூறுவதில் அதிக மகிழ்ச்சியடைகின்றேன்.**

- திருமதி. ஜான்ஸி, கும்பகோணம்




அன்பரின் ஊழிய
ஜெபஸ்தலத்திற்கு
நீங்களும் நேரில் வந்து
ஜெபித்து செல்லலாம்.
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 மணியிலிருந்து
மாலை 6.00 மணி வரை
உங்களுக்காக ஜெபிக்க
Dr. ஆனந்த ஸ்திரா, அவர்கள்
குடும்பத்தினர் மற்றும்
ஜெபவீரர்கள் காத்திருக்கிறார்கள்!

அன்பரின் ஊழியம்,
10வது குறுக்குத்தெரு,
மேற்கு விஸ்தரிப்பு
தில்லைநகர், திருச்சி – 620018
0431 – 2765386, 0431 – 2741925
94888 45627



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

**சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவுதாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன். – ஏசாயா 41:17**

அன்புள்ளம் கொண்ட தேவ பிள்ளைகளே! இதுநாள் வரை எங்களோடு இணைந்து நீங்கள் செய்யும் நற்பணிகளுக்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறோம். சோர்ந்து போகாமல் நாம் எப்போதும் நன்மை செய்யவேண்டும் என்று கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டு இருக்கிறார். ஆகவே தொடர்ந்து ஏழை, எளிய பிள்ளைகளுக்கு நம்மால் இயன்ற நன்மைகளை செய்வோம். **நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் - கலாத்தியர் 6 : 9** ஆம் எனக்கன்பானவர்களே!

நமது **S.J.Saves Trust** மூலமாக ஏராளமான மாணவ, மாணவிகளுக்கு உதவி செய்து வருவதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்த மாணவர்களின் பெற்றோர்கள் இளம் வயதிலேயே குடிப்பழக்கத்திற்கு அடிமைகளாகி, அதன் நிமித்தம் வீட்டில் கடுமையான வறுமை மற்றும் தரித்திரத்துடனே வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக அவர்களுடைய ஊர்களில் கிடைக்கின்ற தரம் குறைந்த, விலை மலிவாக உள்ள மதுவகைகளை வாங்கிக் குடித்து, அதன் நிமித்தம் நரம்பு தளர்ச்சி ஏற்பட்டு பெலவீனத்துடன் காணப்படுகிறார்கள். அதனால் வேலைக்கு செல்லவும் பெலன் இல்லாமல், சரியாக சாப்பிடவும் முடியாமல், பெலவீனத்துடனே இருந்து, இறுதியில் 35 வயதிற்குள்ளாகவே மரித்தும் விடுகின்றார்கள். இவர்களுடைய பிள்ளைகள் உயிர் வாழ அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல், அரசு பள்ளிக்கூடங்களுக்கும் செல்லாமல், காட்டு வேலைகளுக்கு செல்கிறார்கள்.

இந்த அவல நிலையை போக்க நல்ல கல்வியை அவர்களுக்கு கொடுத்து, உற்சாகப்படுத்த ஏற்படுத்தப்பட்டதே நமது Day Care Centre. பிள்ளைகள் அனைவரும் மிகுந்த சந்தோஷமாய் இங்கு வருகிறார்கள். அவர்களுடைய தாய்மார்களும் மனமகிழ்ச்சியோடு அனுப்பி வைக்கிறார்கள். ஏனென்றால் இங்கே கட்டுபாடுகள், கடவுளுக்கு பயப்படும் பயம், நல்ல கல்வி அனைத்தும் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. இங்குள்ள 8-ம் வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்கு வாய்ப்பாடு கூட சொல்லத் தெரியவில்லை. அந்த அளவிற்கு கல்வி அறிவில் பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். நம்முடைய ட்யூசன் சென்டரில் அவர்களுக்கு இதை கற்றுக்கொடுத்து அவர்கள் கல்வி அறிவை உயர்த்துகிறோம்.

இன்றும் அநேக எளிமையான சிறு பிள்ளைகள் அதிக கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். வேதத்தில் தண்ணீர் என்று சொல்லும் பொழுது அது உணவு, சுகம் மற்றும் வாழ்வின் தேவைகளை குறிப்பதாகும்.

ஆபிரகாம் வீட்டிலிருந்து ஆகார் என்னும் அடிமைப் பெண் இஸ்மவேலாடு திடீரென்று வீட்டை விட்டு வெளியே அனுப்பப்படுகிறார். கர்த்தருடைய தூதன், ஆகாரை ஒரு எகிப்தின் அடிமைப்பெண் அல்லது அவிசுவாசி என்று பாராமல் ஆகாரையும் அவள் குமாரனையும் காப்பாற்றி, ஆகாரின் குமாரன் இஸ்மவேலை பெரிய ஜாதியாக்கி ஆசீர்வதிக்கிறதை நாம் வேதத்தில் பார்க்கிறோம். ஆம், கர்த்தர் பசியால் வாடுகிறவர்களுக்கு ஆகாரத்தையும், வஸ்திரம் இல்லாதவர்களுக்கு வஸ்திரத்தையும், விதவைகளை ஆதரிக்கவும், அந்நியர்களை உபசரிக்கவும், பரதேசிகளை காப்பாற்றவும், நீதிமானை நேசிக்கிறவராகவும் இருக்கிறார். எனவே நமது Day

Care Centre பணிகளுடன், ஏராளமான ஏழை பிள்ளைகளுக்கு அடிப்படை தேவையான உணவு வகைகள், மருந்துகள், குளியல் சோப், சீப்பு, எண்ணெய், படிப்பதற்கு நல்ல நோட்டு புத்தகங்களை வாங்கிக் கொடுக்கின்றோம்.

கடந்த மாதத்தில் சேலம் மாவட்டம் பத்தாங்கல்மேடு, மேட்டுப்பட்டி, பெருமாபாளையம், சக்திநகர், டவர்லைன், வெள்ளாளகுண்டம், கூட்டாத்துப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள 200 பிள்ளைகளுக்கு முகக்கவசம், சோப், கோல்கேட் பேஸ்ட், பிரஸ், வி.வி.டி. தேங்காய் எண்ணெய், சீப்பு மற்றும் Protein powder, vitamin syrup, Cold syrup மருந்துகளும் வழங்கப்பட்டது. இதற்கு உதவிய அன்புள்ளம் கொண்ட உங்கள் ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

இப்போதும் இந்த கொரோனா காலத்தின் கஷ்டங்களிலும் நாம் இந்த அறப்பணியை நம்முடைய பங்காளர்களைக் கொண்டே நடத்த வேண்டியதாக இருக்கிறது. தற்சமயம் 1100 பிள்ளைகளுக்கு நாம் ஒவ்வொரு நாளும் உணவு தருகின்றோம். நல்ல ஆசிரியர்களை கொண்டு பாடங்களையும் கற்பித்து வருகின்றோம். இன்னும் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் இந்த பயிற்சி மையத்தில் சேருவதற்காக காத்திருக்கிறார்கள். நமக்கு வருகிற கொஞ்சம் நன்கொடைகளை வைத்து நம்மால் முடிந்த அளவு உதவி செய்து வருகிறோம். கர்த்தர் தாமே ஜனங்களுக்குள் தயாள குணத்தை பெருக்கச் செய்யும்படி ஜெபியுங்கள். தரித்திரனுக்கு கொடுப்பவன் ஒன்றிலும் தாழ்ச்சியடைய மாட்டான். கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அபரிவிதமாக ஆசீர்வதிப்பாராக!

ஆகஸ்ட் மாதத்திலிருந்து தொடர்ந்து நமது ட்யூசன் மையங்களில் உள்ள ஆயிரத்து நூறு மாணவர்களுக்கு, பல ஆசிரியர்களை கொண்டு சிறப்பான முறையில் ட்யூசன் வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு மாதத்திற்கு மொத்தம் **Rs.10,00,000/-** வரை செலவாகிறது. இம்மட்டும் எங்களோடு துணை நின்று உதவுகின்ற உங்களுக்கு எங்களது நன்றிகளை தெரிவிக்கிறோம்.

**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act-ன்படி Sec. 80G Exemption உண்டு**

**Tamil Whats App No: 95004 87059**

dranandastira@mojindia.org, margret@mojindia.org, joshua@mojindia.org, jane@mojindia.org, info@mojindia.org

## சேலம் மாவட்டம் பத்தாங்கல்மேடு, மேட்டுப்பட்டி, பெருமாபாளையம், சக்திநகர், டவர்லைன், வெள்ளாளகுண்டம், கூட்டாத்துப்பட்டி ஆகிய கிராமங்களில் உதவிகள் வழங்கினோம். அதில் ஒரு பகுதியினர்














# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை பணிகள்

நமது கிராமப்புற மருத்துவமனை பணிக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். இப்பொழுது நமது மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் செயல்படுகிறார்கள். ஒரு M.B.B.S. இன்னொரு M.D. & M.S. Dr. ஒருவர். மருத்துவமனை எல்லா விதத்திலும் சிறப்பாக வளர்ந்து பெருகும்படி ஊக்கமாய் ஜெபியுங்கள். மாதந்தோறும் மருத்துவர், செவிலியர்கள், பாராமெடிக்கல் பணியாளர்கள் etc., இவர் களுக்கு சம்பளம் கொடுப்பது எளிதான காரியமல்ல. நமது கிராமப்புற மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகள் பலர் போதுமான வசதி இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். இதனுடைய ஒவ்வொரு மாத தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

உங்களுக்குத் தெரிந்த தேவபிள்ளைகள் B.Sc., X-Ray Technician, Nurses, B.Sc., Lab Technician தேவனுக்கு பயந்தவர்கள் இருந்தால் மருத்துவபணிகளுக்கு அனுப்பிவைக்கலாம். இலவசமாக வந்து அவ்வப்பொழுது உதவி செய்ய விரும்புகிற Dr, Children Specialist, மகளிருக்கான சிறப்பு மருத்துவர்கள் இருந்தால் தாராளமாய் வந்து உதவ வரவேற்கப்படுகிறார்கள். உங்கள் விருப்பங்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது மருத்துவமனையில் அநேக முன்னேற்றங்கள் செய்யவும் ஜெபியுங்கள். உடனடியாக எலும்பு முறிவுதுறைக்கு ஒரு சிறிய அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் அல்ட்ரா சவுண்டு ஸ்கேன் வசதி செய்யப்படவேண்டும். இதற்கான செலவு **Rs.50,00,000/-** வரை ஆகும். உங்களில் ஒரு சிலரை கர்த்தர் ஏவினால் தாங்குங்கள். உதவி செய்பவர்கள் உங்கள் தாராளமான காணிக்கைகளை அனுப்புங்கள்.




**Telugu Whats App No: 91770 87860**




❀ சத்தீஸ்கர் மாநிலம் பெயரைக் கேட்டவுடனே நக்சல் பூமி என்ற எண்ணமே மனதில் தோன்றும். ஆனால், தற்போது வன்முறை குறைந்து மாநிலம் முழுவதும் அமைதி திரும்பி வருகிறது. அமாவாசை முடிந்து பௌர்ணமி அன்று முழுநிலவாகக் காட்சி தரும் நிலவின் அழகுபோல, சத்தீஸ்கரின் உண்மையான அழகு இப்போதுதான் வெளியுலகுக்குத் தெரியவருகிறது. இயற்கையின் பேரெழில் கொட்டிக் கிடக்கும் அதன் அழகை ரசிக்காமல் இத்தனை நாள் தவறவிட்டுவிட்டோமே என ஆதங்கப்படுகிறார்கள் சுற்றுலாப் பிரியர்கள்.



இந்தப் பிராந்தியத்தில் 36 மண் கோட்டைகள் இருந்த காரணத்தினால், சத்தீஸ் (36 என்று பொருள்) கட் (கோட்டை) என்ற பெயர் வந்தது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

அப்படியென்ன இருக்கிறது சத்தீஸ்கரில்?

மாநிலத்தின் மொத்தப் பரப்பில் 44 சதவிகிதம் காடுகள். மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் தொல்குடிகள். இந்தியாவின் முதல்தரமான சால் மற்றும் தேக்கு மரங்கள் விளையும் பூமி. 3 தேசிய வனவிலங்குச் சரணாலயங்கள், 13 தேசிய வனவிலங்குப் பூங்காக்கள், ஒரு பல்லுயிர் வளம் பெருக்கப் பூங்கா, மனிதனால் உருவாக்கப்பட்ட ஆசியாவின் மாபெரும் வனவியல் பூங்கா. 5 நதிகள், சுமார் 40 அருவிகள், இவற்றில் **"இந்தியாவின் நயாகரா"** என்று அழைக்கப்படும் **"சித்ரகூட்"** அருவியும் ஒன்று. இப்படி இயற்கை ஒட்டு மொத்தமாக குத்தகைக்கு எடுத்துக்கொண்ட வனதேசம் சத்தீஸ்கர்.

அருவிகள் என்றாலே அழகுதான். ஆனால் சித்ரகூட் பேரழகு கொண்ட ராட்சத அருவி. அதனைப் பார்த்து வியந்து போகாத விழிகளே இருக்க முடியாது. அவ்வளவு அழகு. சுமார் 980 அடி அகலம், 300 மீட்டர் நீளம், 98 அடி உயரம் கொண்ட இந்த அருவி பிரமாண்டத்தின் உச்சம். பஸ்தர் மாவட்டத்தில் கோதாவரியின் கிளை நதியான இந்திராவதியில் மிக ரம்மியமான சூழலில் இந்த அருவி அமைந்துள்ளது. பருவமழைக் காலத்தில் பேரிரைச்சலுடன் அருவி கொட்டும் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும். அத்தனை ரம்மியமாக இருக்கும்.

பருவ மழைக்காலம் முடிந்தவுடன் ஆறேழு பகுதிகளாகப் பிரிந்து, தனித்தனியே நீர் கொட்டும். அப்போது அங்கு உருவாகும் வானவில் பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வாருங்கள் மானிடரே.. என் எழிலைப் பாருங்கள் என கர்வத்தோடு பல்லாண்டுக் காலமாக மனிதர்களை அழைத்துக் கொண்டே இருக்கிறது சித்ரகூட்.



❀ கரூர் மாவட்டத்தில் காவிரி, அமராவதி, நொய்யல் உள்ளிட்ட ஆறுகள் பாய்ந்தாலும் 70 சதவிகித நிலங்கள் வானம் பார்த்த பூமியாகவே உள்ளது. இதனால் அங்குள்ள நிலங்கள் அனைத்தும் மானாவாரி நிலங்களாக உள்ளன. மழைப்பொழிவும் குறைவாக உள்ள மாவட்டம் என்பதால், அதிகம் விவசாயம் நடப்பதில்லை. மேலும், தமிழகத்தில் அதிகம் வெயிலின் தாக்கம் உள்ள மாவட்டங்களில் ஒன்றாகவும் கரூர் மாறியிருக்கிறது. இந்த மூன்று ஆறுகளைவிட, உயர்வான பகுதிகளில் 70 சதவிகித நிலங்கள் இருப்பதால், அங்குள்ள ஏரி, குளம் உள்ளிட்ட நீர்நிலைகளுக்குத் தண்ணீர் கொண்டு போக முடியாத சூழல் ஏற்படுகிறது. தமிழக அளவில் மூன்றாவது பெரிய ஏரியான பஞ்சப்பட்டி ஏரியும் கடந்த 10 வருடங்களாக வறண்டு கிடக்கிறது. இதனால், முக்கிய ஏரிகளில் தண்ணீர் நிரப்ப வழிவகை செய்ய வேண்டும் என்று இங்குள்ள விவசாயிகள் தொடர் கோரிக்கை வைத்து வருகின்றர். இந்நிலையில, அமைச்சர் செந்தில் பாலாஜி 10 புதிய நுண்ணீர் ஏற்றப் பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப் படும் என்று அறிவித்திருப்பது விவசாயிகளை மகிழ்ச்சியடைய வைத்திருக்கிறது.




**இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக் கொள்ளுகிறவர்களைப்போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார். கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார் – ஏசாயா 50:4,5a**

கர்த்தருடைய தாசனாகிய ஏசாயா என்னும் மிகப்பெரிய தீர்க்கதரிசி, தன் வாழ்வில் கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட வெளிப்பாடுகளை, மேற்கூறிய வேத வசனங்களில் தெளிவாக எழுதியிருக்கிறார். ஏசாயா புத்தகத்தை படித்தாலே அதில் பாதிக்கு மேலான அதிகாரங்கள் நம்மை மிகவும் ஆறுதல்படுத்துவதாகவும், உற்சாகப்படுத்துவதாகவும் இருக்கும். **பல சமயங்களில் நான் சோர்ந்து போகும் பொழுது ஏசாயா தீர்க்கதரிசி எழுதிய புத்தகத்தின் பல அதிகாரங்களை திரும்ப திரும்ப ஆடியோவில் கேட்பேன். அந்த வல்லமையுள்ள வார்த்தைகள் மிகுந்த ஆறுதலை எனக்குத் தரும்.** என்னிடத்தில் வருகிற ஒவ்வொரு நொறுங்குண்ட, பணிந்த, கண்ணீர் வடிக்கிற ஆத்துமாக்களுக்கு ஆறுதல் தரும் வார்த்தைகளை சத்திய வேதத்திலிருந்து எடுத்து கூறுவேன். இந்த ஆறுதலின் வார்த்தைகள் வருத்தப்பட்டு பாரம் சுமக்கும் மக்கள் உள்ளத்தில் பசுமரத்து ஆணிபோல பதிந்து விடுகிறது. இவ்வார்த்தைகளுக்காக அவர்கள் வெகு தூரம் பயணம் செய்து என்னிடத்திலும், எனது குடும்பத்தாரிடத்திலும் தேவ வார்த்தை, நல்ல ஆலோசனை கிடைக்கும் என்று ஆர்வத்தோடு வருகிறார்கள். எனவே தான் நடு இரவு முதல் அதிகாலை வரை பல மணிநேரம் தேவ சமூகத்தில் நான் காத்திருப்பேன். அதற்கு பிற்பாடு நொறுங்குண்டு தவிக்கிற மக்களிடம் பேசுவேன். அப்பொழுது அம்மக்கள் தேவனுடைய வார்த்தைகளை கேட்டு மிகுந்த ஆறுதல் அடைவார்கள்.

இயேசு கிறிஸ்து தம்முடைய வாழ்க்கையில் அதிகாலையில் தனி இடத்திற்கு சென்று பல மணிநேரம் ஜெபித்ததாக வேதத்தில் வாசிக்கிறோம். அதுமாத்திரமல்ல, ஜனத்திரள்கள் மத்தியில் பேசிவிட்டு இரவு முழுவதும் அவர் தேவ சமூகத்தில் காத்திருப்பதையும் பார்க்கிறோம் **(மாற்கு 1:35; 6:46; லூக்கா 5:14).** இப்படியாக நாமும் மக்களுக்காக ஜெபித்து ஆலோசனை கூறும் பொழுது, தேவன் பலத்த அற்புதங்களையும், மாற்றங்களையும் மக்களுடைய வாழ்வில் செய்கிறார்.

அன்பரின் ஊழியம் சார்பில் இவ்வாறு ஆலோசனை பெற்று அற்புதங்களை பெற்றவர்கள் அநேகர். இந்த ஊழியம் இன்னும் அநேகரை சென்றடைய ஜெபத்தோடு செயல்படுகிறோம். இதன் தொடர்ச்சியாக நம்முடைய ஊழியத்தை நேசித்து மற்றவர்களுக்காக ஜெபிக்க பாரத்தோடு செயல்படுபவர்களை நாடுகிறோம். அதன்படி பல ஊர்களில் நாம் இப்படிப்பட்ட காரியங்களுக்காக அதற்கு ஏற்ற இடங்களை பார்த்து வருகின்றோம்.

அந்தந்த இடங்களில் ஊழியத்தில் ஆர்வமுள்ள மக்களை தேடுகிறோம். இதுபோன்று ஊழியத்தில் ஆர்வமுள்ளவர்கள் உங்களுக்கு தெரிந்தால், எங்களுக்கு உடனடியாக தெரியப் படுத்துங்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்த கடினமான ஊழியத்தை எப்படி செய்ய வேண்டும், துயரப்படும் மக்களுக்கு எவ்விதமான ஆலோசனை சொல்லவேண்டும் என்று தெளிவாக, இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். உங்களுக்கு வேண்டிய தகுதி, நல்ல ஜெப வாஞ்சை உள்ளவர்களாக, வேதத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால் போதுமானதாகும். பயிற்சி உங்களுக்கு நன்கு தெரிந்தபடி அன்பரின் ஊழியத்தின் மூலம் கர்த்தர் செய்த, செய்து வருகிற அற்புதங்கள் ஏராளம், ஏராளம். நீங்களும் துயரப்படும் மக்களுக்காக ஜெபித்து, இப்படிப் பட்ட கடினமான ஊழியத்தில் உங்களை ஈடுபடுத்தி கொள்ளலாம் அல்லவா? **எனவே இந்த ஆலோசனை ஜெப ஊழியத்தில் எங்களுக்கு உதவியாக இருக்க விரும்புகிறவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.**

**தொடர்புக்கு**
**80987 42638**

## செப்டம்பர் மாத வினா-விடை கேள்விகளுக்கான சரியான பதில்கள்

1. சிம்சோன்
2. யோனா
3. தாவீது
4. 10 வாதைகள்
5. எலியா
6. ஆபிரகாம்
7. இளைய மகன்
8. நோவா
9. தானியேல்
10. எஸ்தர்

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

1. Mrs. பியூலா அகஸ்டஸ், சென்னை
2. Sis.I. சுசிலா, திண்டுக்கல்
3. Mrs. ஷோபா கிருபாகரன், திருநெல்வேலி
4. Mrs. ராஜேஸ்வரி நெல்சன், சென்னை
5. Mrs. செல்வி சாம் டானியேல், கன்னியாகுமரி



குறிப்பு : நாகர்கோவில் பகுதியில் உள்ள வயதானவர்கள், வியாதியினால் கஷ்டப்படுபவர்கள் வீட்டிற்கு வந்து ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எங்கள் பிரதிநிதியை தொடர்புகொள்ளுங்கள். அவர்கள் உங்கள் இல்லத்திற்கு வந்து ஜெபிப்பார்கள். (அலைபேசி எண் : 82203 17472)

# பறவைகள்

## தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள் – நீதி. 30:5

தொகுப்பு : Dr. ஜேன் ஜாஷ்வா

**பதில்களை வசன ஆதாரத்துடன் பிழையின்றி எழுதுங்கள்**

**உதாரணம்: தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற இடம் காணாமல் திரும்பி வந்தது எவை?**

**பதில் : புறா (ஆதி. 8:9)**

1. அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் எவைகளுக்கு ஒப்பாக மாற்றினார்கள்?

   ..............................................................................................................................

2. இங்கே விழுந்து மிதியுண்டவைகளை பட்சித்துப்போட்டவைகள் எவை? அவை எங்கே விழுந்தது?

   ..............................................................................................................................

3. பேதையான புறாவைப்போல் இருக்கிறவன் யார்?

   ..............................................................................................................................

4. அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிருந்தது எது?

   ..............................................................................................................................

5. தகைவிலான் குருவியைப்போலும் கூவி, புறாவைப்போல் புலம்பிய இவர் யார்?

   ..............................................................................................................................

6. மகாதேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று அழைத்தது யார்? யாரை அழைத்தார்?

   ..............................................................................................................................

7. கழுகைப்பார்க்கிலும் வேகமானவர்கள் இருவர். அவர்கள் யார்?

   ..............................................................................................................................

8. ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிறவைகள் எவை?

   ..............................................................................................................................

9. "என் தலையின்மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது" யார்? யாரிடம் சொன்னது?

.................................................................................................................................

10. பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை யாருக்கு கொடுக்கப் பட்டது? அவை எங்கிருந்து வந்தது?

.................................................................................................................................

11. தலை தங்கமயம், தலைமயிர் சுருள் சுருள். எவற்றைப்போல் கருமை என கண்டு பிடியுங்கள்?

.................................................................................................................................

12. நாங்கள் எங்கள் பார்வைக்கும், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம். எப்படி?

.................................................................................................................................

13. குகையின் வாய் ஓரங்களில் கூடு கட்டுகிற புறாவுக்கு ஒப்பானவர்கள் யார்?

.................................................................................................................................

14. இவை இரண்டும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது. அந்த இரண்டு ஆகாரம் என்ன? அவன் யார்?

.................................................................................................................................

15. ஜீவனுள்ள சகலருடைய கண்களுக்கும் ஒளித்தும், ஆகாசத்துப் பறவைகளுக்கு மறைந்தும் இருக்கிறது எது?

.................................................................................................................................

உங்கள் முகவரி, பங்காளர் எண் மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் எழுதுங்கள். விடைகளைத் தெளிவாகப் புரியும்படி எழுதி இந்தப் பக்கங்களைக் கிழித்து எங்களுக்கு அனுப்பவும்.

.................................................................................................................................

.................................................................................................................................

விடைகள் நவம்பர் மாதம் 30ஆம் தேதிக்குள் எங்களிடம் வந்து சேரவேண்டும்.

முகவரி: அன்பரின் ஊழியம், 10-வது குறுக்குத் தெரு மேற்கு விஸ்தரிப்பு, தில்லைநகர், திருச்சி-18.

உங்களுடைய பதில்களை வினாத்தாளிலேயே எழுதுங்கள். தனிப்பிரதியில் எழுத வேண்டாம். நீங்கள் பதில்களை வைத்து அனுப்பும் கவரை அதிக பசை போட்டு ஒட்டாதீர்கள்.

**உங்களின் கனிவான கவனத்திற்கு...**
**தங்களைப் பற்றிய தகவல்களைப் புதுப்பியுங்கள்!**

*அன்பிற்குரிய பங்காளர்களே!*

உங்களைப் பற்றியப் பல புதிய தகவல்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வராமலேயே உள்ளது. எங்களிடம் உள்ள பதிவேட்டில் கூடுதல் தகவல்களைச் சேகரிக்க உள்ளோம். எனவே, தங்களைப் பற்றிய கீழ்க்காணும் தகவல்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

1. பங்காளர் பெயர் : ..........................................................................................
2. பங்காளர் எண் : ..........................................................................................
3. அலைபேசி எண் : ..........................................................................................
4. WhatsApp No. : ..........................................................................................
5. பிறந்தநாள் : ..........................................................................................
6. திருமண நாள் : ..........................................................................................
7. இ-மெயில் (e-mail) : ..........................................................................................
8. முழு விலாசம் (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்): ..................................................

   ..........................................................................................

   ..........................................................................................
9. பிற இன்றியமையாத தகவல்கள்: ..........................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

   ..........................................................................................

மேற்கண்ட தகவல்கள் அனைத்தும் சரியாகவும், தெளிவாகவும் இ-மெயில், கடிதம், **WhatsApp No. 95004 87059** மூலமாகவும் தெரியப்படுத்தலாம். இவை உங்களை எளிதில் தொடர்பு கொள்ளவும், உங்களின் ஜெபத்தேவை அறிந்து இன்னும் ஊக்கமாய் ஜெபிக்கவும் உதவியாக இருக்கும்.

**இந்தப் பக்கத்தைக் கிழித்தோ அல்லது ஜெராக்ஸ் எடுத்தோ பூர்த்தி செய்து அனுப்பலாம்.**

திருச்சியில்

# அற்புத குடும்ப ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2021
**நவம்பர் 27**
சனிக்கிழமை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

தேவ செய்தி

**Dr. ஆனந்தஸ்திரா & குடும்பத்தினர்**

நேரம் :
காலை 9.30 மணி முதல்
மதியம் 2.00 மணி வரை

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

அரசாங்க வழிகாட்டுதல் நெறிமுறைகளை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்

# தனி ஜெபம் மற்றும் ஆலோசனை

**Dr. ஆனந்த ஸ்திரா** மற்றும் அவர்கள் குடும்பத்தினரை
சந்தித்து ஜெபிக்க விரும்புகிறவர்கள்
கீழ்க்கண்ட அலைபேசியில் முன் அனுமதி பெற்று வருமாறு
கேட்டுக் கொள்கின்றோம்.

**செல் : 80987 42638 & 94888 45627**

## எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15